சுருக்கம் 035110

பொதுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.பா.சரவணன் த/பெ. (அமரர்) வி.பாபு – இளநிலை உதவியாளர் பணிநியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவுகள் 20 (6) (b) மற்றும் 28 (2)–ஐத் தளர்வு செய்து – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை**

அரசாணை (3ப) எண்.13

நாள் :10.08.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, ஆடி – 26.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.21812/நிபி8/1/2019, நாள். 28.05.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.

******

**ஆணை :-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் துப்புரவு பணியாளராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.வி.பாபு என்பவர் 21.04.2002 அன்று இறந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 23.05.1964 அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.05.2024 என்றும் இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.பா.சரவணன் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 13.09.2006 நாளிட்ட கடிதத்தின் மூலம் விண்ணப்பித்துள்ளார் என்றும், இவரின் பிறந்த தேதி 07.02.1986 என்றும் தெரிவித்துள்ளார். அரசு ஊழியர் இறந்த நாளான 21.04.2002 அன்று தனியர் 16 வயதினையும், விண்ணப்பம் அளித்த நாளான 13.09.2006 அன்று 20 வயதினையும் நிறைவு செய்துள்ளார்.

2. திரு.பா.சரவணன் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற போதிய கல்வித் தகுதி பெற்றிருந்ததாலும், வயது வரம்புக்குள் இருந்ததாலும், மூன்றாண்டுகள் கடந்த நிலையில் தான் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குடும்பம் வறுமை சூழலில் உள்ளது என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்தில் எவரும் அரசு/ தனியார் துறையில் பணியில் இல்லை என்றும், இறந்த அரசு

// த.பி.பா. //

035110



ஊழியர் குடும்பத்திற்கு அசையும் / அசையாச் சொத்துக்கள் ஏதுமில்லை என்று வேலூர் வட்டம் வட்டாட்சியர் சான்றளித்திருந்ததாலும், மனுதாரர் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற ஆட்சேபணை இல்லை என அரசு ஊழியர் குடும்பத்தில் இதர நபர்கள் எழுத்து மூலமாக தெரிவித்திருந்ததாலும், மற்றும் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற இதர நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்ததாலும், மனுதாரர் திரு.பா.சரவணன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, அவர் 23.05.2018 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் எனத் தெரிவித்து, தனியர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 23.05.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர் (பொ) அரசைக் கோரியுள்ளார்.

3. மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, தனியர் திரு.பா.சரவணன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை 23.05.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள். 23.01.2020, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20 (6) (b) மற்றும் பணிநியமன நாளிலிருந்து பணப்பலன்களை முன்தேதியிட்டு வழங்கக் கருதும் நிலையில் மேற்காணும் சட்டப்பிரிவு 28 (2)–ஐயும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்த்தி, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 23.05.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறைகளின் இசைவினை முறையே அத்துறைகளின் அ.சா.எண்.10505/க்யூ1/2020, நாள் 31.07.2020 மற்றும் அ.சா.எண்.18112/ஜி2/2020-1, நாள்.06.08.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
திரு.பா.சரவணன், இளநிலை உதவியாளர், (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை – 600 018.

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெ. இந்திரா
12/08/2020